**கொக்கட்டிச்சோலை படுகொலைகளில்**
**உயிரிழந்த 142 பொதுமக்கள்**
**நினைவாகத் தூபி இன்று திறப்பு**

கொக்கட்டிச்சோலையில் படு கொலை செய்யப்பட்ட பொதுமக்க ளின் ஞாபகார்த்த தூபியொன்று இன்று மகிழடித்தீவுச் சந்தியில் திறந்துவைக்கப்படும்.
1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் 85 பொதுமக்கள் படு கொலை செய்யப்பட்டனர். 1997 ஆம் ஆண்டு மகிழடித்தீவுச்சந்தியில் 57 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டனர்.
இந்தப் படுகொலைகளில் உயிரி ழந்த 142 பொதுமக்களின் பெயர் கள் பொறிக்கப்பட்ட ஞாபகார்த்தத் தூபியை புலிகளின் கிழக்கு மாகா ணத் தளபதி கேணல் கருணா இன்று காலை 9 மணிக்குத் திறந்து வைப் பார்.
அம்பிலாந்துறை, அரசடித்தீவு, மகிழடித்தீவு, முதலைக்குடி, முனைக் காடு, கொக்கட்டிச்சோலை, கடுக் காய்முனை, பண்டாரியவளி, பட்டிப் பளை போன்ற பகுதிகளில் வசித்த பொதுமக்களே படையினரால் படு கொலைசெய்யப்பட்டனர் எனக் கூறப் படுகின்றது.
அவர்கள் கொலை செய்யப்பட்டு இன்று 16 வருடங்கள் பூர்த்தியாகி யுள்ளன. 1987 ஜனவரி மாதம் 28 ஆம் திகதி படுகொலை இடம்பெற்றது.